# ஈழத்தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் தேசியக்கொடியைத் தடையிலிருந்து பாதுகாப்போம்!

## சுருக்கம்

ஈழத்தமிழர்களின் தேசியக்கொடி அவர்களின் பண்பாட்டு அடையாளம், மொழி மற்றும் வரலாற்றுத் தொன்மையின் அடையாளமாகும். இந்தக் கொடி ஈழத் தமிழர்களின் வரலாற்றொடும், பாரம்பரியங்களோடும் இணைந்த தெளிவான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது.

யேர்மனியில் எமது தேசியக்கொடியினை சட்டரீதியாகத் தெளிவாகவும், வேறுபாடுகளை உணர்ந்தும் மதிப்பிட வேண்டும் என்று நாம் கோருகிறோம். எமது தேசியக்கொடியினை காட்டுவதையே யேர்மன் குற்றச் சட்டத்தின் (§ 86a Abs. 2 S. 2 StGB) படி தடைசெய்யப்பட்ட குறியீடாகக் கருதி குற்றமாகப் பார்க்கக் கூடாது, ஏனெனில் அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு அடையாளம், சமூக ஒற்றுமை, மற்றும் அரசியல் கருத்துச் சுதந்திரத்தின் வெளிப்பாடாக இருக்கிறது.

பெறுநர்கள்:

- யேர்மனிய மத்திய உள்துறை அமைச்சகம்
- யேர்மனிய மத்திய நீதி அமைச்சகம்
- மாநிலங்களின் உள்துறை மற்றும் நீதித்துறை அமைச்சகங்கள்
- தொடர்புடைய பேரணி, ஒன்றுகூடல் மற்றும் குற்றவியல் அமுலாக்க நிறுவகங்கள்

1990 ஆம் ஆண்டுகளிலிருந்து ஈழத்தமிழர்களின் கொடி உலகளவில் பண்பாட்டு அடையாளம், மொழி மற்றும் வரலாற்று வேர்களின் அடையாளமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக பொதுக்கூட்டங்கள், நினைவேந்தல் நிகழ்வுகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் தேசியக்கொடி பல தசாப்தங்களாக எமது அடையாளத்தை பேணிக்காக்கும் சின்னமாக நிலைத்துள்ளது.

2021 ஆம் ஆண்டிலிருந்து, யேர்மனியில் பொதுவெளியில் எமது தேசியக்கொடியைப் பயன்படுத்துவதற்கெதிராக குற்றவியல் வழக்குகள் தொடுக்கப்பட்டு வருவதை நாம் கவனிக்கின்றோம். வரலாற்றின் ஓட்டத்தில் உருவாகிய எமது தேசியக்கொடியினை இவ்வாறு குற்றத்துடன் இணைப்பது, எமது பார்வையில், மிகுந்த சட்டப் பாதுகாப்பின்மையையும் குழப்பத்தினையும் உருவாக்குகின்றது.

## முதன்மைக் கோரிக்கை

எமது தேசியக்கொடியை குற்றமாக்கும் நடைமுறையை உடனடியாக நிறுத்த வேண்டும். அதேவேளை, ஈழத் தமிழர்களின் தேசியக்கொடி என்பது அடையாளம், நினைவு மற்றும் தன்னாட்சி ஆகியவற்றின் வெளிப்பாடாக இருப்பதால், யேர்மன் குற்றச் சட்டம் § 86a Abs. 2 S. 2 StGB இன் கீழ் தண்டனைக்குரிய, தடைசெய்யப்பட்ட குறியீடாகக் கருதப்படக்கூடாது என்று தெளிவான சட்ட மற்றும் நிர்வாக நிலைப்பாடு எடுக்கப்பட வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

## கோரிக்கைக்கான காரணங்கள்

### 1. வரலாற்று மற்றும் கலாச்சார பின்னணி

ஈழத்தமிழர்களின் கொடியின் அடையாளச் சின்னங்கள் தமிழர் வரலாற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அதன் மையச் சின்னமான புலிச்சின்னம், வரலாற்றில் முதன்மையான தமிழ் பேரரசுகளில் ஒன்றான சோழப் பேரரசுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.

இந்த தேசியக்கொடியும் அதிலுள்ள சின்னங்களும் சுதந்திரமான, சமத்துவமான மற்றும் தன்னாட்சி கொண்ட சமூகத்தை பிரதிபலிக்கின்றன. புலிச்சின்னம் பாரம்பரியமாக பாதுகாப்பு, வலிமை மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் குறியீடாகக் கருதப்படுகின்றது. இந்தச் சின்னத்தின் பொருள் நவீன அரசியல் மோதல்களுக்கு முன்பே இருந்து வந்துள்ளது. அத்தோடு தலைமுறைகள் கடந்தும் தமிழ் கலாச்சாரத்தில் தொடரப்படுகின்றது.

உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களுக்கு எமது தேசியக்கொடி அவர்கள் மொழி, வரலாறு மற்றும் பண்பாட்டு வேர்களின் வெளிப்பாடாக உள்ளது.

### 2. இன்றைய காலத்தில் இதன் முதன்மைத்துவம்

இன்றைய ஈழத்தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தில், எமது தேசியக்கொடி பொதுநிகழ்வுகள், நினைவுநாள்கள் மற்றும் ஒன்றுகூடல்களில் பயன்படுத்தப்படுகிறது. இங்கு அடையாளம், நினைவு, கருத்துரிமை, ஒற்றுமை மற்றும் சமூக இணைப்பு முதன்மைத்துவம் பெறுகின்றன.

ஈழத் தமிழர்கள் தங்கள் வரலாற்றுத்தாயகத்தில் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நிலமைகள் இன்றளவும் தொடர்கின்றது. மனித உரிமை மற்றும் அனைத்துலக சட்ட ஆய்வாளர்கள் இந்நிலமையினை வரலாற்று மற்றும் தொடர்ச்சியான கட்டமைப்புச்சார் இன அழிப்பாக வகைப்படுத்துகின்றனர்.

இன்றையசூழலில் எமது தேசியக்கொடி ஆழமான உணர்ச்சி மற்றும் பண்பாட்டு அடையாளத்தை கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில்:

- தமிழ் மொழியைப் பாதுகாக்கவும் பரப்பவும் உதவுகிறது,
- பண்பாட்டு பாரம்பரியங்களைப் பாதுகாக்கின்றது,
- ஒரே வரலாற்று அடையாளத்தின் தெளிவான வெளிப்பாடாகச் செயல்படுகிறது,
- தலைமுறைகள் கடந்தும் பண்பாட்டு விழுமியங்கள், தாயகம், நினைவுகொள்ளல் மற்றும் ஒற்றுமையுணர்வை பரிமாறுகின்றது.

## 3. சமூக ஒற்றுமைக்கான முக்கியத்துவம்

யேர்மனி பல்வேறு கலாச்சாரமக்கள் ஒன்றிணைந்து வாழும் ஒரு நாடாகும். பல சமூகங்கள் தங்களின் வரலாற்றையும் அடையாளத்தையும் சின்னங்களின் மூலம் பொதுவாழ்க்கையில் வெளிப்படுத்துகின்றன.

குடிமக்களாகிய நாங்கள் யேர்மனியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள சுதந்திரங்களையும் ஜனநாயக பண்புகளையும் உயர்வாக மதிக்கிறோம். அதேவேளை, நாங்கள் தஞ்சம்கோரிய பின்னணியுடனும் இடம்பெயர்ந்த அனுபவங்களுடனும் உள்ள மக்களாக, சமூக ஒற்றுமையை மேலும் வளப்படுத்தும் தனித்துவமான பார்வைகளையும் எங்களுடன் கொண்டுள்ளோம்.

இந்தப் பரிமாற்றம் வெற்றிகரமாக அமைய, எங்கள் சின்னங்களுடன் நுணுக்கமாகவும், வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளும் வகையிலும் அணுகுவது மிக முதன்மையானதாகும். அத்தகைய அணுகுமுறை இனங்களுக்கிடையே புரிதலை மேம்படுத்துகின்றது. அத்தோடு சமூகத்தின் ஜனநாயகப் பங்கேற்பை வலுப்படுத்துகின்றது.

யேர்மனி தனது சொந்தக் கலாச்சார அடையாளத்தை எப்படிப் பாதுகாத்து வருகின்றதோ, அதுபோன்றே நாமும் ஈழத்தமிழர்களாக, எமது பண்பாடு மற்றும் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாப்பதையே எங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம். இந்த வேர்களைப் பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைகளுக்கு உரிய சொத்தாக வழங்க வேண்டியது எமது விருப்பமாகும்.

இதன் மூலம் எமது பிள்ளைகளுக்கு, அவர்களின் வரலாற்றுத் தோற்றத்துக்கும் அவர்கள் யேர்மனியில் உருவாக்கிக் கொண்டுள்ள தற்போதய வாழ்விடத்திற்கும் இடையில் ஒரு பாலம் அமைக்கின்றோம்.

ஈழத் தமிழர் தேசியக்கொடியை குற்றமாக்குவதன் விளைவுகள்:

- சிங்கள, பௌத்த பேரினவாத சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்கள் மீது மேற்கொண்டுவரும் கட்டமைப்புசார் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு இது போன்ற தடைகள் மேலும் வலுவூட்டுவதாக அமைகின்றது.
- யேர்மனியில் வாழும் ஈழத்தமிழர்களை களங்கப்படுத்துவதற்கு வழிவகுக்கிறது
- உரிமைசார்ந்த நீதியான நினைவுகூரற் பண்பாட்டினைத் தடுக்கின்றது
- ஜனநாயகப் பங்கேற்புடன் தொடர்புடைய சட்டப் பாதுகாப்பின்மையை உருவாக்குகின்றது
- பன்முகத்தன்மையுடன் இருக்கும் சமூகத்தின் விழுமியங்களுக்கு நேரடியான முரண்பாடாக நிற்கின்றது.

ஆகையால், கீழே குறிப்பிடப்படும் அதிமுதன்மையான நடவடிக்கைகள் காலதாமதமின்றி உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டுமென நாம் கோருகின்றோம்:

- **தேசியக்கொடியின் ஏற்புரிமை**
  ஈழத் தமிழர்களின் தேசியக் கொடி, யேர்மன் குற்றச்சட்டம் § 86a Abs. 2 S. 2 StGB இன் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட குறியீடாக அமையாது என்பதனை சட்டரீதியாக தெளிவுபடுத்தப்படவேண்டும்.

- **நடைபெற்று வரும் வழக்குகளை நிறுத்துதல்**
  பொதுவெளியில் எமது தேசியக்கொடியை காட்டியதற்காக தொடுக்கப்பட்டுள்ள அனைத்து குற்றவியல்விசாரணைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

- **வெளியான பண்பாட்டு பார்வையும், அடையாளமும் பாதுகாக்கப்படுதல்**
  ஈழத்தமிழர்கள் தமது அடையாளத்தினையும் கூட்டுத்துயரத்தையும் அமைதியான முறையில் வெளிப்படுத்தும்போது, அவர்களின் தனிநபர் வளர்ச்சிக்கும் கருத்துரிமைக்கும் அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களாகிய நாம் யேர்மன் சமூகத்தின் ஓர் அகற்ற முடியாத அங்கமாக இருக்கின்றோம், மேலும் சுதந்திர ஜனநாயக அடிப்படை ஒழுங்கின் விழுமியங்களுக்கு முழுமையாக உடன்படுகின்றோம்.

இவ்வாறான ஆழ்ந்த ஜனநாயக நம்பிக்கையிலிருந்தே, அரசியலமைப்புச்சட்டத்தில் பதியப்பட்டுள்ள உரிமைகள் தொடர்ந்தும் தளர்வின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென நாம் உரிமையுடன் வலியுறுத்துகின்றோம்.

யேர்மனியின் அரசியலமைப்புச்சட்டத்தின் (Grundgesetz) 5 ஆம் மற்றும் 8 ஆம் உறுப்புரைகளில் நமக்குக் கிடைக்கும் ஒன்றுகூடும் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் படி எமது பண்பாட்டு அடையாளத்தை பயன்படுத்தி சுதந்திரமாக வாழவும், வரலாற்று தொடர்புகளை வெளிப்படுத்தவும், ஒன்றுபட்ட குடிமக்களாக சமூக விவாதங்களில் பங்கேற்கவும் அனுமதிக்க வேண்டுகிறோம்.

**நிறைவாக எமது முதன்மைக் கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்குங்கள்!**

யேர்மனியில் ஈழத் தமிழர்களின் தேசியக் கொடிக்கு சட்டரீதியான பாதுகாப்பினையும், நீதியான முறையில் பயன்படுத்தப்படுவதற்கும் நீங்கள் உங்கள் ஆதரவினை வழங்குமாறு நாம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த கோரிக்கைகளின் வழியாக, தொடர்புடைய அனைத்துத் தரப்புகளும் நேர்த்தியான உரையாடல்களின் மூலம் உருவாக்கும் ஒரு தீர்வை இலக்காகக் கொண்டுள்ளோம். அது சட்டப் பாதுகாப்பினை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், யேர்மனியில் ஈழத் தமிழர்களின் சமூகப் பங்கேற்பினையும், தமது பண்பாட்டு அடையாளங்களை பயன்படுத்துவதனையும் உறுதிசெய்யுமென உளப்பூர்வமாக நம்புகிறோம்.